டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,   எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ்   "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்"   DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com   PRGI:TNTAM/25/A1018   Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01   ISSUE: 145   19.11.2025   WEDNESDAY   KARTHIGAI : 2   PRICE : RS.5/-
மலர் : 01   இதழ் : 145   19.11.2025   புதன்கிழமை   கார்த்திகை : 2   விலை : ரூ.5/-

3 நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 22% ஆக உயர்த்த வேண்டும்: பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

4 போதைப்பொருள் இல்லாத சமுதாய விழிப்புணர்வு பிரச்சாரம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் உறுதிமொழி ஏற்பு

2 'அதிமுக வாக்குகள் தான் அதிகம் காலியாகப் போகிறது!' சீமான் புதிய கண்டுபிடிப்பு

# வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை ஒத்திவைக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் கேரளா மனு

புதுடெல்லி: நவ.19-

உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்த இருப்பதால் தங்கள் மாநிலத்தில் சிறப்பு தீவிர திருத்தத்தை ஒத்திவைக்கக் கோரி கேரள அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது.

இது தொடர்பாக கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. அந்த மனுவில், "அரசியல் சாசன பிரிவு 243ணி, 243ஹி ஆகியவற்றின் படியும், கேரள பஞ்சாயத்து சட்டம் பிரிவு 94ன் படியும், கேரள நகராட்சி சட்டப்படியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை ஐந்தாண்டுகளுக்குள் நடத்தி முடிக்க வேண்டும் என்பது கட்டாயம். இந்த சட்டங்களின்படி, வரும் டிசம்பர் 21, 2025க்குள் கேரள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தி முடித்தாக வேண்டும்.

கேரளாவில் 941 கிராம பஞ்சாயத்துகள், 152 ஒன்றிய பஞ்சாயத்துகள், 14 மாவட்ட பஞ்சாயத்துகள், 87 நகராட்சிகள், 6 மாநகராட்சிகள் என 1,200 உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. மொத்தம் 23,612 வார்டுகள் உள்ளன.

இதை கருத்தில் கொண்டு கேரள மாநில தேர்தல் ஆணையம், டிச.9 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாக தேர்தல் நடத்த திட்டமிட்டுள்ளது. திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம் ஆகிய மாவட்டங்களுக்கு டிச. 9ம் தேதியும், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர், காசர்கோடு ஆகிய மாவட்டங்களுக்கு டிச. 11ம் தேதியும் தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை டிச.13ம் தேதியும், தேர்தல் முடியும் கடைசி தேதி டிச.18ம் தேதி என்றும் திட்டமிடப்பட்டுள்ளது.



இந்திய தேர்தல் ஆணையம் நவ.4 முதல் டிச.4 வரை வீடு வீடாகச் சென்று சிறப்பு தீவிர திருத்தத்தை மேற்கொள்வதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மாநில உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் மற்றும் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் என இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்வது அரசுப் பணியாளர்களை சோர்வடையச் செய்யும். அதோடு, அரசாங்கத்தின் தினசரி பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் இல்லாத நிலை உருவாகும். இதனால், நிர்வாகம் ஸ்தம்பிக்கும் நிலை உருவாகும். எனவே, இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

சிறப்பு தீவிர திருத்தப் பணி என்பது, ஒரு லட்சத்து 76,000 அரசு பணியாளர்கள் மற்றும் 68,000 காவல்துறையினர் ஆகியோர் ஈடுபடக்கூடிய மிகப் பெரிய பணி. கூடுதலாகவும் 25,668 பணியாளர்கள் கோரப்பட்டுள்ளனர். தேர்தல் பணிகளில் பயிற்சி பெற்ற அதிகாரிகள் குறிப்பிடத்தக்க அளவில்தான் உள்ளனர். சிறப்பு தீவிர திருத்தத்துக்கு இவ்வளவு எண்ணிக்கையில் பணியாளர்களை அளிப்பது, மாநில நிர்வாகத்தை கடுமையாக பாதிக்கும்.

சிறப்பு தீவிர திருத்தத்தை கொள்கை அளவில் கேரள அரசு ஆதரிக்கவில்லை. எனினும், தற்போதைய சிக்கல் என்பது சிறப்பு தீவிர திருத்தத்தின் சட்டப்பூர்வ நிலை பற்றியது அல்ல. மாறாக, அது எத்தகைய காலத்தில் நடத்தப்படுகிறது என்பது தொடர்பானது. எனவே, சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்வதை ஒத்திவைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




■ திருச்சி மாவட்டம், இலால்குடி சட்டமன்ற உறுப்பினர்அ.சௌந்தரபாண்டியன் ,இலால்குடி தொகுதி கல்லக்குடி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு நிதிஉதவி பெறும் டால்மியா மேல்நிலைப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு படித்து வரும் 204 மாணவ, மாணவியருக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.அருகில் பள்ளி நிர்வாகிகள், டால்மியா சிமெண்ட் ஆலை நிர்வாகிகள்,பள்ளி ஆசிரியை,ஆசிரியர்கள், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவதாக பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப் குமார் பாராட்டு

### ரூ.2 கோடியே 82லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் அண்ணா தினசரி மார்க்கெட் கட்டிட பணிகளை விரைந்து முடிக்க உத்தரவு

சின்னாளபட்டி, நவ.19

சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப் குமார் அதிரடி ஆய்வு செய்த பின்பு வளமீட்பு பூங்காவிற்கு சென்று பார்வையிட்ட அவர் பணிகள் சிறப்பாக இருப்பதாக பாராட்டியதோடு ரூ.2கோடியே 82லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் அண்ணா தினசரி மார்க்கெட் கட்டிட பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.



திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளை அதிரடியாக ஆய்வு செய்ய வந்த பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப்குமார் அவர்கள் நிலக்கோட்டை மற்றும் வத்தலக்குண்டு, சித்தையன்கோட்டை பேரூராட்சிகளை ஆய்வு செய்த பின்பு சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சிக்கு வருகைதந்த பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப்குமார் செம்பட்டி சாலையில் உள்ள வளமீட்பு பூங்காவிற்கு சென்று பார்வையிட்டார். அப்போது மண்புழு உரம் தயாரிப்பது குறித்தும் விவசாயிகளுக்கு எவ்வளவு விற்பனை செய்கிறீர்கள் என்பதை கேட்டறிந்தார். அதன்பின்னர் துனிகழிவுகளை கொண்டு தரைவிரிப்பு தயாரிக்கும் பகுதிக்கு சென்ற அவர் சிறப்பாக பணி செய்கிறீர்கள் வளமீட்பு பூங்காவை சிறப்பாக வைத்துள்ளீர்கள் என கூறி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா அவர்களையும் செயல் அலுவலர் இளவரசி அவர்களையும் பாராட்டினார். அதன்பின்னர் பேரூராட்சி அலுவகம் எதிரே ரூ.2கோடியே 82லட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் அண்ணா தினசரி மார்க்கெட் கட்டிட பணிகளை பார்வையிட்ட அவர் ஏன் கட்டிட பணிகள் தாமதமாக நடைபெற்று வருகிறது என்று கேள்வி கேட்டதோடு அண்ணா தினசரி மார்க்கெட்டிற்கு வரும் பொதுமக்களுக்கான கழிப்பறை எங்கு உள்ளது என கேட்டறிந்தார். அதன்பின்னர் நுழைவு வாயில் எந்த பகுதியில் அமைக்கிறீர்கள், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தை முறையாக அமைக்க வேண்டுமென உத்தரவிட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் பிரதீப்குமார் கட்டிட பணிகள் தாமதமாக நடைபெற்றுவருவதால் விரைந்து முடிக்க வேண்டுமென கூறி ஒப்பந்தகாரரை அழைத்து கட்டிட பணிகள் தாமதமாக செய்யகூடாது விரைந்து முடிக்க வேண்டுமென உத்தரவிட்டார். இதுதவிர மார்க்கெட் முழுவதும் தரைதளத்தில் பேவர்பிளாக் கற்கள் சாலை அமைக்க வேண்டும் என்றார். அதன்பின்னர் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புறப்பட்டு சென்றார். ஆய்வின்போது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ராஜா, உதவி செயற்பொறியாளர் மேனகா, செயல் அலுவலர் இளவரசி, பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துப்புரவு அலுவலர் மணிகண்டன், துப்புரவு மேற்பார்வையாளர்கள் சரளா, அகில்ராஜ், தலைமை எழுத்தர் ராமமூர்த்தி, கணக்காளர் கலைச்செல்வி, மற்றும் பேரூராட்சி அலுவலக பணியாளர்கள் உடனிருந்தனர்.

## 2026ம் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இந்திய தேசிய காங்கிரஸ் இருக்க வேண்டும் : தமிழ்மொழி வளர்ச்சி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க தலைவர் இராமு.ராமசாமி வேண்டுகோள்

சின்னாளபட்டி, நவ.19

2026ம் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இந்திய தேசிய காங்கிரஸ் இருக்க வேண்டும் என்று தமிழ்மொழி வளர்;சசி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க தலைவரும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணைத்தலைவருமான இராமு.ராமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இராமு.இராமசாமி

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டியை சேர்ந்தவர் தியாகி இராமு.ராமசாமி இவர் தமிழ்மொழி வளர்;சசி தமிழக எல்லை மொழிப்போர் தியாகிகள் சங்க தலைவராகவும், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி மாவட்ட துணைத்தலைவராகவும் பதவியில் உள்ளார். தற்போது உள்ள அரசியல் சூழ்நிலையில் நடிகர் விஜயின் கட்சியான தமிழக வெற்றிக்கழகத்துடன் காங்கிரஸ் பேரியக்கம் கூட்டனி குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக இணையத்தில் தகவல் வந்ததை அடுத்து தியாகி இராமு. ராமசாமி இதுகுறித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் பீகார் சட்டமன்ற தேர்தல் முடிவு தமிழகத்தில் திமுக கூட்டனிக்கு கடுகளவும் பாதிப்பை ஏற்படுத்தாது. கூட்டணி கட்சிகளை அரவனைத்து செல்வதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் பின்பற்றி வருகிறார். கூட்டணி கட்சிகளை மதிக்கும் பண்பு திமுகவிற்குதான் உள்ளது. 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் வெற்றி கூட்டனியான திமுகவுடன் காங்கிரஸ் பேரியக்கம் இணைந்து செயல்பட வேண்டும். இதை மீறி காங்கிரஸ் பேரியக்கம் திமுகவிலிருந்து விலகி வேறு கட்சியுடன் இணைந்து போட்டியிட்டால் மாபெரும் தோல்வி அடைவதோடு காங்கிரஸ் கட்சியினர் தமிழகத்தில் தேர்தல் பணியை முறையாக செய்யமாட்டார்கள். குறிப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக இருக்கும் ஐ.பெரியசாமி அவர்கள் கூட்டணி கட்சி என்றும் பாராமல் காங்கிரஸ் கட்சியினரை மதிப்புடன் நடத்தி வருகிறார். ஆத்தூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சியினர் மாற்று கட்சியினருக்கு தேர்தல் பணி செய்ய மாட்டார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அவர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# திண்டுக்கல் மாவட்டம் மஞ்சப்பை விருது பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன்



திண்டுக்கல், நவ.19-

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர், 202223 நிதியாண்டிற்கான மஞ்சப்பை விருதுகளை சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்தார். ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள்

மீதான தடையை திறம்பட செயல்படுத்தி, ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் (SUP) கை பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றுகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து, மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பித்து, தங்கள் வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு இது வழங்கப்படும். முதல் பரிசாக ரூ. 10 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சம் பரிசு வழங்கப்படும்.

இந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (TNPCB), ஒற்றைப்பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளுக்கு மாற்றாகப் சுற்றுச் சுழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், தங்கள் வளாகங்களுக்கு உள்ளேயும் வெளியேயும்

ஆக்கப்பூர்வமான முயற்சிகள் மூலம் தடையை அமல்படுத்துவதற்கும், வளாகத்தை பிளாஸ்டிக் இல்லாததாக மாற்றுவதற்கும் முன்மாதிரியான பங்களிப்பைச் செய்த பள்ளிகள்/கல்லூரிகள்/ வணிக நிறுவனங்களுக்கு மஞ் சப்பை விருதுகளை வழங்க முன்மொழிகிறது.

விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக இணையதளத்திலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

குறிப்பு :

1) விண்ணப்பங்களின் அனைத்து இணைப்புகளிலும் தனிநபர்/

அமைப்புத் தலைவர் முறையாக கையொப்பமிட வேண்டும்.

2) விண்ணப்பங்களின் மென் நகலுடன், இரண்டு அச்சுப் பிரதிகள்

(கடின நகல்) மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும், மஞ்சப்பை விருதினை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பள்ளிகள், கல்லூரிகள்

மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை வருகின்ற 15.01.2026ஆம்

தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன்,

அவர்கள் தெரிவித்துள்ளார்.

# பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்



திருச்சி, நவ.19

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவோம் என்ற பல்வேறு தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாததை கண்டித்து ஜாக்டோ ஜியோ சார்பில் இன்று (நேற்று)தமிழக முழுவதும் வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்றது. பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும், தமிழகத்தில் உள்ள இடைநிலை முதுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கிட வேண்டும், அரசுத் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும், காலி பணியிடங்களில் நிரப்பாமல் ஊழியர்களை அதிக பணிச்சுமைக்கு ஆளாக்குவதை நிறுத்தவேண்டும் உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இன்று(நேற்று) மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் ஜாக்டோ ஜியோ சார்பில் நடத்தப்பட்டது.

அந்தவகையில், திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் கோரிக்கைகளை நிறைவேற்றாததை கண்டித்து ஜாக்டோ ஜியோ அமைப்பினர் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கையில் பதாகைகளை ஏந்தியவாறு கண்டன முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்திற்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நீலகண்டன் நாகராஜன், உதுமான் அலி, பால்பாண்டி, நவநீதன் ஆகியோர் தலைமை தாங்கினார். மாநில ஒருங்கிணைப்பாளர் அன்பரசன் சிறப்புரையாற்றினார். முடிவில் மாவட்ட நிதி காப்பாளர் ஆரோக்கியராஜ் நன்றி கூறினார்.இந்தப் போராட்டத்தில் 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



■ செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் 89 வது நினைவு நாளை முன்னிட்டு, எஸ்.பி.எம். சாரிட்டிஸ் டிரஸ்ட் மற்றும் வெட்டிக் ஆர்கனைஸர் நிர்வாக அறங்காவலர் தீபவதி வில்சன் ராஜ்குமார் ஆகியோர் திருச்சி நீதிமன்றம் அருகிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# ‘அதிமுக வாக்குகள் தான் அதிகம் காலியாகப் போகிறது!’ சீமான் புதிய கண்டுபிடிப்பு



சென்னை, நவ.19-

தங்கள் எஜமானர் கொண்டு வந்தது என்பதால் எஸ்ஐஆரை பழனிசாமி ஆதரிக்கிறார். ஆனால், அதிகப்படியாக அவரது வாக்குகள் தான் காலியாகப் போகிறது என்று நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் கள்ள ஓட்டுப் போட்டது, ஓட்டுக்கு காசு கொடுத்தது எல்லாம் தேர்தல் ஆணையத்துக்குத் தெரியாதா? இதை எல்லாம் தேர்தல் ஆணையத்தால் சரிசெய்ய முடியவில்லை. ஜனநாயக நாட்டில் வாக்குரிமை தான் மக்களுக்கு உள்ள உரிமை. அதை இவ்வளவு தான்தோன்றித்தனமாக பதிவு செய்துகொடுத்துவிட்டு போ எனச் சொல்வது எப்படிச் சரியாகும்?

இதுவரை வாக்காளர்கள் தங்களுக்கான ஆட்சியாளர்களை தேர்வு செய்தார்கள். ஆனால் இப்போது, ஆட்சியாளர்கள் தங்களுக்கான வாக்காளர்களை தேர்வு செய்கிறார்கள். இதுதான் எஸ்ஐஆர். திமுகபோன்ற கட்சிகளுக்கு அமைப்பு உள்ளது. அவர்கள் பணிகளை செய்கிறார்கள். எங்களைப் போன்ற வளர்ந்து வரும் கட்சிகள் என்ன செய்ய முடியும்? இதனால், குறைந்தது ஒரு கோடி பேர் வாக்குரிமையை இழப்பார்கள். குடிமக்களுக்கான ஆதாரமே ஆதார் என்றீர்கள். இப்போது அது இல்லை என்கிறீர்கள்.

இரண்டு மாதத்தில் தேர்தல் வந்துவிடும். தேர்தல் பரப்புரைக்கு ஓடிக்கொண்டு இருக்கிறோம். அத்தகைய சூழலில் இது என்ன மாதிரியான நெருக்கடி. மக்களை ஏன் பதற்றமாகவே வைத்துள்ளீர்கள்? அதிமுக எஸ்ஐஆரை ஆதரிக்கிறது. ஏனென்றால், அவர்களது எஜமான் கொண்டு வந்தது. பழனிசாமி ஆதரிக்கிறார். ஆனால், அதிகப்படியாக அவரது வாக்குகள் தான் காலியாகப் போகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மும்பை வரை நீண்ட டில்லி கார் குண்டுவெடிப்பு வழக்கு; சிக்கிய 3 சந்தேக நபர்களிடம் தீவிர விசாரணை

மும்பை: நவ.19-

நாட்டையே உலுக்கிய டில்லி கார்குண்டுவெடிப்பு வழக்கு விசாரணை இப்போது மும்பை வரை நீண்டுள்ளது. சந்தேக நபர்கள் 3 பேரை பிடித்து போலீசார் தீவிர புலன் விசாரணையில் இறங்கி உள்ளனர்..

தலைநகர் டில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்தை தேசிய புலனாய்வு முகமை விசாரித்து வருகிறது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் யார்? அதற்கான திட்டமிடல் எங்கே அரங்கேற்றப்பட்டது? டாக்டர்களாக இருந்து சதி செயலை நிறைவேற்றியவர்களின் பின்னணியில் உள்ளவர்கள் பற்றிய விவரங்களை தேசிய புலனாய்வு குழுவினர் பல்வேறு கோணங்களில் தோண்டி எடுத்து வருகின்றனர்.

15 பேரை பலிவாங்கிய இந்த சம்பவத்தின் ஆரம்ப புள்ளி டில்லியில் மட்டுமல்ல, பல்வேறு இடங்களில் வியாப்பித்து இருக்கலாம் என்ற கோணத்தில் தேசிய புலனாய்வு குழு விசாரணையை தீவிரப்படுத்தி இருக்கிறது.

அதன் முக்கிய கட்டமாக, குண்டுவெடிப்பு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பயங்கரவாதிகள் யார், யாருடன் தொடர்பு வைத்திருந்தனர்? எங்கெல்லாம் சென்று வந்திருக்கின்றனர்? என்பதை விசாரித்து வருகின்றனர். இந் நிலையில் மும்பையில் போலீசார் மேற்கொண்ட ஒரு ரகசிய நடவடிக்கையில் திடீர் திருப்பம் ஏற்பட்டு உள்ளது.

போலீசாரின் இந்த நடவடிக்கையில் 3 பேர் சிக்கியுள்ளனர். இந்த 3 பேரும், மெத்த படித்த, சமூகத்தில் மிக வசதியான குடும்ப பின்னணியில் இருந்து வந்தவர்கள். அவர்களிடம் நடத்தப்பட்ட புலன் விசாரணையில் டில்லி கார் குண்டுவெடிப்பு பற்றியும், அதில் ஈடுபட்டவர்களிடம் தொடர்பில் இருந்தது பற்றியும் சில முக்கிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக தெரிகிறது.

இதையடுத்து, சிக்கிய அந்த 3 பேரையும், தலைநகர் டில்லிக்கு அடுத்தக்கட்ட விசாரணைக்காக மிக ரகசியமாக அழைத்துச் செல்லப்பட்டு இருப்பதாக மும்பை போலீசார் தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகி உள்ளன.

3 பேரும் டில்லி குண்டுவெடிப்பு சம்பவத்தை அரங்கேற்ற காரணமாக இருந்த முக்கிய குற்றவாளியிடம் தொடர்பில் இருந்துள்ளனர், இந்த தகவல் தொடர்புக்காக அவர்கள் பிரத்யேக மொபைல் அப்ளிகேஷன் ஒன்றை பயன்படுத்தி உள்ளதாக மும்பை போலீசார் கூறுகின்றனர்.

அங்கு 3 பேரிடம் மத்திய புலனாய்வு விசாரணை அமைப்புகள் விசாரணையை தொடங்கி உள்ளதாகவும் அந்த தகவல்கள் கூறுகின்றன. அதில் டில்லி குண்டுவெடிப்பில் அவர்களின் பங்களிப்பு என்ன என்பது பற்றிய முக்கிய தகவல்கள் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசாரணையின் அடுத்த கட்டமாக, மஹாராஷ்டிராவின் அனைத்து மாவட்டங்களிலும் முக்கிய ரகசிய நடவடிக்கைகளிலும் மாநில போலீசார் இறங்கி உள்ளனர்.




# மாநில ஹேக்கத்தான் இன்னோவா TN 25 போட்டியில் PACM பள்ளி மாணவர்கள் முதல் இடம் பெற்று சாதனை

விருதுநகர். நவ.19

விருதுநகர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில், சென்னையில் உள்ள சாய் ராம் இன்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான இன்னோவா TN 25 ஹேக்கத்தான் போட்டியில், PACM ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நால்வர் சிறப்பான சாதனை படைத்துள்ளனர். ஷெல் நெக்ஸ்ப்ளோரர் திட்டத்தின் கீழ் லேர்னிங் லிங்க்ஸ் பவுண்டேஷன் வழிகாட்டுதலில் பயிற்சி பெற்ற 9ஆம் வகுப்பு மாணவர்கள் ஞான கௌதம், லோகேஷ் குமார், கணேஷ் ராம் மற்றும் மித்தேஷ் தங்களின் ப்ளே 2 பவர்: ப்ளே மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துதல் திட்டத்திற்காக, முதல் பரிசை வென்று, பணப்பரிசையும் பெற்றுள்ளனர். அறிவியல் ஆர்வத்தையும் சமூக நல எண்ணத்தையும் அடிப்படையாகக் கொண்ட இவர்களின் திட்டம், லேர்னிங் லிங்க்ஸ் பவுண்டேஷன் மூலம் பள்ளிகளில் நடத்தப்படும் ஷெல் நெக்ஸ்ப்ளோரர் திட்டமானது, மாணவர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உலகளாவிய சுற்றுச்சூழல், பொருளாதார மற்றும் சமூக சவால்களைச் சமாளிக்க பயிற்றுவிக்கிறது. நீர், உணவு, சக்தி தொடர்பான புதுமையான திட்டங்களை உருவாக்கி அதற்கான தீர்வுகளை மாணவர்கள் கண்டறிய ஊக்குவிக்கப்படுகின்றனர். வெற்றி பெற்று பள்ளிக்கு திரும்பிய மாணவர்களை பள்ளித் தலைமையாசிரியர் மாரிமுத்து C, ATL ஆசிரியர் திரு கலைச்செல்வன், மற்றும் ஷெல் நெக்ஸ்ப்ளோரர் வழிகாட்டிகள், மாணவர்களின் குழுவாக செயல்படும் திறன் , படைப்பாற்றல், புதிய படைப்புக்கான ஆர்வம் ஆகியவற்றை பாராட்டி வாழ்த்தினர்.



■ திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினருமான கே.ஈஸ்வர சாமி அவர்கள் தலைமையில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவெள்ளி முரளி, தொகுதி பார்வையாளர் தமிழ் மறை முன்னிலையில் எஸ் ஐ ஆர் தீவிர வாக்கு திருத்தம் பணிகள் சம்பந்தமாக எம்பி அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்துக்கு அவைத்தலைவர் ஜெயபால், பொருளாளர் முருகானந்தம், வக்கீல் சிதம்பரநாதன், வக்கீல் பொன்ராஜ், பொது குழு உறுப்பினர் யு. ன். பி. குமார் மற்றும் பூத்து ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டார்கள்.




■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனிதவள வேளாண்மை துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம் கொடுவாய் சுப்பராய கவுண்டர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற, 72 வது அனைத்து இந்திய கூட்டுறவு வார விழாவில், வருவாய் துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், திருப்பூர் மாநகராட்சி நாடாளுமன்ற தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர்.

## கண்ணீர் அஞ்சலி



**பத்திரகாளி அம்மாள்**

நமது செய்தியாளர் திசையன்விளை D.P.சரவணன் அவர்களின் தாயார் திருமதி D.பத்திரகாளி அம்மாள் அவர்கள் இன்று 18.11.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய சக்கர வியூகம் புலனாய்வு நாளிதழ் குழுமத்தின் சார்பாக இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

# நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 22% ஆக உயர்த்த வேண்டும்: பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

சென்னை, நவ.19-

விவசாயிகளின் நலன்கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முதல்வர் மு.க. ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சாதனை படைத்த குறுவை பருவ நெல் உற்பத்தி

தமிழ்நாட்டில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில், இந்த ஆண்டு கரீஃப் (குறுவை) பருவத்தில் மிக அதிக அளவு நெல் உற்பத்தி எய்தப்பட்டுள்ளது. 16.11.2025 நிலவரப்படி நெல் கொள்முதல் கடந்த 20242025 ஆம் ஆண்டினுடைய 4.81 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து நடப்பாண்டில் 14.11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்றும் இது தமிழ்நாட்டின் வரலாற்றில் குறுவை (கரீஃப்) பருவத்தில் நெல் கொள்முதலில் புதிய சாதனையாகும் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 16.11.2025 நிலவரப்படி 1,932 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 1,86,674 விவசாயிகளிடமிருந்து 14.11 லட்சம் மெட்ரிக் டன் நெல்லை ரூ. 3,559 கோடி வழங்கி கொள்முதல் செய்துள்ளது. ஒப்பீட்டளவில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் (16.11.2024 வரை) 1,095 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 4.83 லட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.



தற்போதைய நெல் கொள்முதல் பருவத்தில் (31.08.2026 வரை) விற்பனைக்குரிய சந்தை உபரி நெல் 98.25 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி அடிப்படையில் இது 66.81 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இது தொடர்பாக, 8.8.2025 அன்று, Kharif Marketing Season (KMS) 2025 -2026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 20 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்குமாறு மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு முன்மொழிவு பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை, ரிவிஷி 20252026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 31.3.2026 வரை 16 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயித்துள்ளது. நெல் சாகுபடியில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் சாதனை அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, ரிவிஷி 20252026க்கான 16 லட்சம் மெட்ரிக் டன் அரிசி இலக்கை, கரீஃப் பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப உயர்த்தி திருத்தம் செய்திட தமிழ்நாடு அரசுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை

17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக நிர்ணயிக்குமாறு தமிழ்நாடு அரசால் 19.10.2025 அன்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மூன்று குழுக்கள் 25.10.2025 முதல் 28.10.2025 வரை தமிழ்நாட்டில் களப் பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மாதிரிகளை சேகரித்தன. ஆனால் தளர்வு தொடர்பான உத்தரவுகள் இன்றளவும் கிடைக்கவில்லை.

கரீஃப் (குறுவை) பருவ கொள்முதல் இன்றளவும் நடந்து கொண்டிருக்கும் நிலையில், 16.11.2025 முதல் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடையும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கொள்முதல் செய்யப்படும் நெல்லில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில் ஈரப்பத அளவு தளர்வு உத்தரவினை விரைவாக வழங்கிட வேண்டும் என்று முதலமைச்சர், பிரதமரிடம் இக்கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

செறிவூட்டப்பட்ட அரிசி மாதிரிகள் எடுப்பதில் தளர்வு ஆணைகள் கோரி மாநில அரசு, 07.10.2025 அன்று 5 ஒப்பந்ததாரர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை விநியோகிக்க உத்தரவு வழங்கியது என்றும் 16.11.2025 நிலவரப்படி ஒப்பந்ததாரர்கள் 1,760 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, FoR-Trace இணையதளத்தில் 123 மாதிரிகளைப் பதிவேற்றியுள்ளனர் என்றும், இதில் பதிவேற்றப்பட்ட 77 மாதிரிகளில், இதுவரை 33 மாதிரிகளுக்கு மட்டுமே முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒரு மாதிரி முடிவை அறிவிக்க கிட்டத்தட்ட 12 நாட்கள் ஆகின்றன என்பதை குறிப்பிட்டு, இந்தமுறை காலதாமதத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியை நகர்வு செய்திடவும், அதனைத் தொடர்ந்து வரவிருக்கும் சம்பா (ரபி) பருவ நெல் கொள்முதலுக்குத் தேவையான இடத்தினை ஏற்படுத்திடவும் அதிக அளவு செறிவூட்டப்பட்ட அரிசி அரவைக்குத் தேவைப்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள 25 கிலோ திஸிரி சிப்பமிடும் அளவை 50 கிலோவாக அதிகரிக்க வேண்டும் என்றும், மாதிரி தொகுதி அளவை 10 MTஇலிருந்து 25 MT ஆக ஙிமிஷி தரநிலைகளுக்கு (ஒரு தொகுதிக்கு 500 மூட்டைகள்) ஏற்ப அதிகரிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை குறைந்து, இடப்பற்றாக்குறை நீங்கி, முடிவுகளை அறிவிக்கும் காலம் 12 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறையும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இது தொடர்ச்சியான நெல் அரவைக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்கி, தென்னிந்திய மாநிலங்களில் உள்ள ஆய்வகங்களில் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பரிந்துரைகளை பரிசீலனை செய்து நெல் அரவை ஆலைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் விநியோகத்தினை எளிதாக்கத் தேவையான உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டுமென்றும், இதன்மூலம் சோதனை முடிவுகளைப் பெறுவதற்கான காலம் கணிசமாகக் குறையும் என்றும், தமிழ்நாடு விவசாயிகளின் நலன் கருதி இவ்விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவுகளை எடுத்திட, முதலமைச்சர், பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# "பெங்களூருவை விட்டு வெளியேறுங்கள்"... ரூ. 50 கோடி வரையிலான சலுகைகளுடன்.!

பெங்களூரு, நவ.19-

பெங்களூருவுக்கு வெளியே உள்ள நகர்களில் புதிதாக ஸ்டார் அப் நிறுவனங்களைத் தொடங்குபவர்களுக்கு கர்நாடக அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

அதிக நெரிசல் மிகுந்த நகரங்களைப் பட்டியலிட்டால் இந்தியாவிலும் சரி, உலகளவிலும் சரி.. எதாவது ஒரு இடம் பெங்களூருவுக்கு ஒதுக்கிவிடலாம். போக்குவரத்து நெரிசல், மக்கள்தொகை அடர்த்தி, வீட்டு வாடகை உயர்வு உள்ளிட்டவைகள் சாமானிய மக்கள் பலரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.



இது ஒருபுறம் இருந்தாலும், அதிகளவிலான மக்கள் தொகை அடர்த்தி, வேலைத்தேடி பெங்களூருவுக்கு வரும் இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஸ்டார் அப் நிறுவனங்களும் மழையில் முளைத்த காளான் போல அதிவேகமாக உருவாகி வருகின்றன. இதனால், பெங்களூரு மட்டும் வேகமாக வளர்ந்த நிலையில் மற்ற மாவட்டங்கள் போதிய வளர்ச்சியைப் பெறவில்லை.

இந்த நிலையில், கர்நாடக அரசு, தனது தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2025 2030ன் அடிப்படையில் இரண்டாம் தர நகரங்களில் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தும் முயற்சியாக புதியதாக தொழில் துவங்கவுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்குப் பல்வேறு சலுகைகளை வெளியிட்டுள்ளது.

கர்நாடகத்தில் உள்ள இரண்டாம் தர நகர்களான மைசூரு, மங்களூரு, ஹூப்லி தர்வாத், பெலகாவி, கலபுரகி, ஷிவமோகா, தேவநகரி, தும்மகூரு உள்ளிட்ட இடங்களில் ஸ்டார் அப் நிறுவனங்களை தொடங்குபவர்களுக்கு பல்வேறு மானியங்கள், சலுகைகள் வழங்க கர்நாடக அரசு முடிவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக கர்நாடக அரசு சுமார் ரூ.960 கோடி வரை நிதி ஒதுக்கியுள்ளது.

ரூ.2 கோடி வரையிலான வாடகையில் சுமார் 50 சதவிகிதம் வரை தள்ளுபடியும், சொத்து வரியில் மூன்று ஆண்டுகளுக்கு 30 சதவிகிதம் வரை தள்ளுபடியும், மின்சார கட்டணத்தில் 5 ஆண்டுகளுக்கு 100 சதவிகித தள்ளுபடியும் பெறலாம்.

அதேபோன்று, செய்யறிவு (AI), பிளாக்செயின் (block-chain) மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் போன்ற துறைகளில் பணிபுரிபவர்களுக்கு தொலைபேசி மற்றும் இணைய பில்களில் 25 சதவிகிதத்தையும் திரும்பப் பெறலாம்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு செலவுகளில் சுமார் ரூ.50 கோடி வரையில் 40 சதவிகிதம் தள்ளுபடி பெறலாம் என்றும் கூறப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் துவங்கும் என்றும், முதலில் வரும் நூறு பேருக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருவாய்த் துறையினர் போராட்டத்தை திமுக அரசு தூண்டுகிறது: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

திருநெல்வேலி: நவ.19-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகளுக்கு எதிராக வருவாய்த் துறையினர் போராட்டம் நடத்த திமுக அரசு தூண்டுகிறது என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டினார்.

திருநெல்வேலியில் வ.உ.சியின் நினைவு தினத்தை ஒட்டி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வ.உ.சிக்கு அஞ்சலி செலுத்துவதில் பெருமைப் படுகிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களை கவுரவப்படுத்துவதில் முதல் ஆளாக இருப்பவர் பிரதமர் மோடி.

திருநெல்வேலி மக்களுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை எதிர்த்து வருவாய்த் துறையினர் தமிழகத்தில் போராட்டம் அறிவித்துள்ளனர். திமுக அரசு தான் வருவாய்த் துறையினரை தூண்டிவிட்டுள்ளது. வருவாய்த் துறையினர் அரசு மீது மிகுந்த கோபத்தில் உள்ளனர்.


தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களை திமுக அரசு அடித்து மிரட்டியது. இப்போது அவர்களுக்கு சோறு கொடுக்கிறார்கள். சோறு கொடுத்தால் மட்டும் போதுமா?. பாஜகவும் விஜய்யும் கூட்டு சேர்ந்துவிட்டனர் என்று சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவுக்கு கூறியுள்ளார் . அவரது விருப்பம் நிறைவேறும்.

எங்களது கூட்டணி குறித்து 2026 ஜனவரி 1ம் தேதிக்கு பின்பு அறிவிப்போம். பிஹாரில் அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் 2% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார். அதுபோன்ற நிலைமை தமிழக வெற்றி கழகத்திற்கும் ஏற்படும்." என்று நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

# ஜாக்டோ ஜியோ போராட்டத்தை திமுக அரசு தூண்டுகிறதா? சட்டப்பேரவை தலைவர் அப்பாவு பதில்

திருநெல்வேலி: நவ.19-

ஜாக்டோ ஜியோ போராடுவது அவர்கள் உரிமை. போராட்டத்தை தூண்ட வேண்டிய அவசியம் திமுகவுக்கு இல்லை. அவர்களுக்கு என்னவெல்லாம் நல்லது செய்ய வேண்டுமோ அதை எல்லாம் தமிழக அரசு செய்கிறது என தமிழக சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தெரிவித்துள்ளார்.



திருநெல்வேலியில் வ.உ.சியின் நினைவு தினத்தை ஒட்டி அவரது மணிமண்டபத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய சட்ட பேரவை தலைவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசியலில் இருப்பவர்கள் வஉசியை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் விவாகரத்தில் திமுகவுக்கு அச்சமில்லை.

எஸ்ஐஆர் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் விதிப்படி அரசு செயல்படுகிறது. அதே நேரத்தில் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்கள் நடத்தியதுடன், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்து உள்ளது. எஸ்ஐஆரை எதிர்த்து போராடுகிறோம் என்ற பெயரில் திமுகவை எதிர்த்து தமிழக வெற்றி கழகம் போராட்டங்களை நடத்தியுள்ளது.

எஸ்ஐஆரை எதிர்க்கிறோம் என்றால் உச்ச நீதிமன்றத்தில் விஜய் வழக்கு தொடர்ந்து இருக்கலாம். மத்திய தேர்தல் ஆணையத்துக்கு மனுவை அனுப்பாமல் மாநில தேர்தல் ஆணையத்திற்கு மனுவை அனுப்பி உள்ளார். எஸ்ஐஆரை எதிர்க்கும் தமிழக வெற்றி கழகம் போராட்டம் வெறும் கண்துடைப்பு. ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தை மனதில் வைத்து செயல்படும் அவர்களது போராட்டத்தை மக்கள் நம்பவில்லை. ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தில் அவர்கள் இருவரும் ஒன்றுபடுகிறார்கள்.

ஜாக்டோ ஜியோ போராடுவது அவர்கள் உரிமை. போராட்டத்தை தூண்ட வேண்டிய அவசியம் திமுகவுக்கு இல்லை. அவர்களுக்கு என்னவெல்லாம் நல்லது செய்ய வேண்டுமோ அதை எல்லாம் தமிழக அரசு செய்கிறது.

மத்திய அரசு அகவிலைப்படியை உயர்த்தியதும் மாநில அரசும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கியுள்ளது. மத்திய அரசு தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய நிதியை வழங்காமல் தமிழகத்தில் நிதி நெருக்கடியை உருவாக்க நினைக்கிறது. இவ்வாறு தெரிவித்தார்.




செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் 89 ஆவது நினைவு தினம்

# தேமுதிகவினர் மாநகர் மாவட்ட செயலாளர் டி.வி.கணேஷ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை

திருச்சி, நவ.19

செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் 89 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருச்சி நீதிமன்றம் அருகில் உள்ள அவரது சிலைக்கு தேமுதிக சார்பில் மாநகர் மாவட்ட செயலாளர் செயலாளர் டி.வி.கணேசன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் ஜெயராமன், திருப்பதி, வாஞ்சி குமாரவேல் மாவட்ட அவைத்தலைவர் ஷாகுல் ஹமீது , பொருளாளர் மில்டன் குமார், துணைச் செயலாளர் பிரீத்தா விஜய் ஆனந்த், காளியப்பன், கலைப்புலி பாண்டியன், பரமசிவம், டிடி கார்த்திகேயன், ஐயப்பன் , பெருமாள், ராஜா, கோபி, செந்தில்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

# பிரதமர் கூட்டத்தில் பங்கேற்றது மகிழ்ச்சி: சசி தரூரால் கடுப்பாகும் காங்கிரஸ்

புதுடில்லி: நவ.19-

டில்லியில் பிரதமர் மோடி பங்கேற்ற கூட்டத்தில் கலந்து கொண்டது மகிழ்ச்சி அளிப்பதாக கூறி அவரை பாராட்டி காங்கிரஸ் எம்பி சசி தரூர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களாக காங்கிரஸ் தலைமை, அக்கட்சியின் திருவனந்தபுரம் தொகுதி எம்பி சசி தரூர் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் அவர் பிரதமர் மோடியை பாராட்டி வருகிறார். இது காங்கிரஸ் கட்சிக்கும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பிறகு இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்க காங்கிரசின் எதிர்ப்பையும் மீறி வெளிநாடுகளுக்கு செல்லும் அனைத்து கட்சி குழு கூட்டத்தில் சசி தரூர் இடம்பெற்றார்.

இதனைத் தொடர்ந்து அவர் அடிக்கடி பிரதமர் மோடியை பாராட்டி வருகிறார். இதனால், சசி தரூரை காங்கிரஸ் கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் பிரதமர் மோடியை பாராட்டி பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் சசி தரூர் கூறியுள்ளதாவது: பிரதமர் மோடி பங்கேற்ற கருத்தரங்கம் ஒன்றில் நானும் பங்கேற்றேன். இந்தியா வளர்ச்சி பெறுவதற்கான நேர்மறையான மாற்றங்கள் குறித்தும், காலனித்துவத்துக்கு பிந்தைய மனநிலை பற்றியும் பேசினார்.

பிரதமர் தனது உரையில், துடிப்பான பொருளாதாரம் காரணமாக, இந்தியா வெறும் வளரும் சந்தையல்ல. உலகத்துக்கான வளரும் மாடல் எனக்கூறியதுடன், எப்போதும் நான்( பிரதமர் மோடி) தேர்தல் மனநிலையில் இருப்பதாக பலரும் விமர்சிக்கின்றனர். ஆனால், மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதில் உணர்ச்சிகரமான மனநிலையில் இருக்கிறேன் எனக்குறிப்பிட்டார்.

மேலும் பிரதமர் தனது பேச்சில் முக்கிய அம்சமாக, மெக்காலேயின் 200 ஆண்டுகால அடிமை மனநிலை முறியடிப்பது பற்றிய கருத்து அமைந்தது. இந்தியாவின் பாரம்பரியம், மொழிகள் மற்றும் அறிவு அமைப்புகளில் பெருமையை மீட்டெடுக்க 10 ஆண்டு தேசிய இயக்கத்துக்கு அழைப்பு விடுத்தார்.

அவரின் உரை பொருளாதார கண்ணோட்டமாகவும், நடவடிக்கைக்கான கலாச்சார அழைப்பாகவும் அமைந்தது. முன்னேற்றத்துக்காக தேசம் துடிப்புடன் இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இந்த கூட்டத்தில் பங்கேற்றது மகிழ்ச்சி. இவ்வாறு அந்தப் பதிவில் சசி தரூர் கூறியுள்ளார்.

பீஹார் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்த நிலையில் பிரதமர் மோடியை சசி தரூர் மீண்டும் பாராட்டியிருப்பது அக்கட்சியினர் இடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



சத்தியசீலன்

சக்கர வியூகம் பத்திரிகையின் நிருவாக ஆசிரியர் காந்தி அவர்களின் தாய்மாமன் சத்தியசீலன் 17.11.2025 திங்கள் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். சக்கர வியூகம் குழுமத்தின் சார்பாக அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம்.



■ தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் இராமமூர்த்தி சாலை, விருதுநகர் மாவட்ட பொதுக்குழு கூட்டத்தின் மாவட்ட தலைவர் பாலமுருகன் தலைமையில் வரவேற்புறை நிகழ்த்தி, இப்பொது குழு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார், கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார், நிகழ்வில் மாநில பொருளாளர் திலகர், மாநில துணை பொது செயலாளர் ஜாஹிர் உஷேன், மேனாள் மாவட்ட தலைவர் அய்யாதுரை, மாவட்ட செயலாளர் சாணக்கியன் மாவட்ட நிர்வாகிகள், பெருமாள்சாமி, சரவணகுமார், யோகராஜ், ஆறுமுகம், முத்துக்கனி, சரவணன். தமிழரசி, மணிகண்டன், மணிசங்கர், ரவி, பாலகிருஷ்ணன், வட்டகிளை தலைவர்கள் ரவிசங்கர், ராமர், முத்து நீலகண்டன், செல்வி, பூமிநாதன், ஜனகராஜ், மற்றும் வட்டகிளை நிர்வாகிகள் ராஜமுத்து,கார்த்தி, தங்கமாரி, மாரிக்கண்ணன், அழகேசன் ,சாந்தி ஆகியோர் கலந்து கொண்டு, இதில் மூன்று முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றி, பல்வகை கோரிக்கைகளை மாவட்டத்தில் இருந்து, மாநில தலைவர் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தின் முடிவில் மாவட்ட பொருளாளர் பாண்டி நன்றி உரையாற்றினார்.

# 30 ஆண்டு காலமாக புரட்சியாளர் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் சிலையை மறு சீரமைப்பு செய்ய விடாமல் தடுக்கும் அதிகாரிகள்

தேனி, நவ.19

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட கிராம சாவடி பகுதியில் புரட்சியாளர் டாக்டர். அம்பேத்கர் சிலை அமைந்துள்ளது 1996 ஆம் ஆண்டு அம்பேத்கர் சிலையின் சிமெண்ட் சிலையில் கை சேதம் அடைந்ததால், தகரம் கொண்டு மூடி பாதுகாத்து பராமரிப்பு பணியில் உத்தமபாளையம் பகுதி மக்கள் பாதுகாத்து வந்துள்ளனர். அதனைத் தொடர்ந்து சிலையை புனரமைப்பு செய்து மாற்றி அமைக்க தற்போது வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி மனு கெடுத்து வருகின்றனர். ஆனால் எந்த அதிகாரியும் மறு சீரமைப்பு செய்ய அனுமதி வழங்காததால் கடந்த ஆண்டு இளைஞர்கள் ஒன்று கூடி தாமாக முன்வந்து தகரத்தை பிரித்து சிலையை புனரமைப்பு செய்து உடைந்த சிலையை பெயிண்டிங் வேலை செய்து வைத்தனர்.





சிலையை மறுசீரமைப்பு செய்ய விடாமல் தடுக்கின்றனர் என மனம் குமுறி வாக்குறுதி கொடுத்துச் சென்ற தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் அவர்களை தனது 1 1/2 மாத காலமாக ஃபோனில் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தி வந்துள்ளனர். அவர் கூறியதை அடுத்து உத்தமபாளையம் கோட்டாட்சியர், உத்தமபாளையம் நெடுஞ் சாலை துறை, பேரூராட்சி செயல் அலுவலர், நகர் மன்ற தலைவர், உத்தமபாளையம் காவல் துறை கண்காணிப்பாளர் உட்பட அனைவரிடத்திலும் மனுக்களை கொடுத்துள்ளனர்

மீண்டும் நேற்று பாராளுமன்ற உறுப்பினரை சந்திக்க சென்றபோது அம்பேத்கர் சிலை மறு சீரமைப்பு கமிட்டியினரை உட்கார வைக்காமல் நின்றபடியே பேசிய வீடியோ போட்டோ சமூக வலைதளத்தில் வைரலான நிலையில், இதற்கு கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன், தேனி பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் மற்றும் தேனி மாவட்ட ஆட்சியர், உத்தமபாளையம் கோட்டாட்சியர், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், உத்தமபாளையம் காவல் துறை கண்காணிப்பாளர், உத்தமபாளையம் நகர்மன்ற தலைவர் செயல் அலுவலர் நெடுஞ்சாலை துறை உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும் அம்பேத்கர் சிலை மறு சீரமைப்பு கமிட்டியாளர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கேள்வியை முன் வைக்கின்றனர். வருகிற டிசம்பர் 6ஆம் தேதி புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாள் டிசம்பர் மாதத்திற்குள் இதற்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு கமிட்டியாளர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



# திருப்பூர் முக்குலத்தோர் பாதுகாப்பு கூட்டமைப்பு ஐம்பெரும் விழா

திருப்பூர், நவ.19-

திருப்பூர் முக்குலத்தோர் பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில், முதலிபாளையம் ஊராட்சியில் மாமன்னர் ராஜராஜசோழன் சதய விழா பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழா, மருது பாண்டியர்கள் குருபூஜை விழா, வாளுக்கு வேலி அம்பலம் ஜெயந்தி விழா, வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு நாள் விழா என ஐம்பெரும் விழா வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். முன்னதாக சிட்கோவில் இருந்து, நான்கு ரோடு சந்திப்பு வரை தலைவர் வீ.டி.பாண்டியன், செயலாளர் பசும்பொன் பாலு, பொருளாளர் கொம்பையா தேவர் தலைவர்களை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு, அவர்களுக்கு மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்பு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தலைவர்கள் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்பு நிகழ்ச்சி நிறைவில் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் நிர்வாகிகள் ராமலிங்க தேவர், செல்லதுரை, ரமேஷ், குமரேசன்,வேல் குமார், நந்தகுமார், சுப்புராம், ஒர்க்ஷாப் ராஜா, கர்ணா மூர்த்தி, போலீஸ்கார்த்திக் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேவரின சொந்தங்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. குழந்தை செல்வங்கள் வருகை தந்த தலைவர்களை சிலம்பாட்டம் சுற்றி வரவேற்றது அனைவரது பாராட்டையும் பெற்றது.

# பெண்கள் மாதவிடாய் காலங்களில் இருக்கும்போது உறவினர்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் மெர்சி பவுன்டேசன் தலைவர் அருள்மெர்சி செந்தில்குமார் பேச்சு

## பெண்கள், பள்ளி மாணவிகள் வெளியிடங்களுக்கு செல்லும் போது நேர்த்தியான உடைகளை அணிந்து செல்ல வேண்டும் நீதியரசர் திரிவேனி பேச்சு

சின்னாளபட்டி, நவ.19

பெண்கள் மாதவிடாய் காலங்களில் இருக்கும்போது உறவினர்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சேரவன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மெர்சி பவுன்டேசன் தலைவர் அருள்மெர்சி செந்தில்குமார் பேசினார். பெண்கள், பள்ளி மாணவிகள் வெளியிடங்களுக்கு செல்லும் போது நேர்த்தியான உடைகளை அணிந்து செல்ல வேண்டும் என்று திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதியரசர் திரிவேனி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உலக சாதனைக்காக திண்டுக்கல் அக்னி சிறகுகள் அமைப்புடன் இணைந்து 1 முதல் 12ம் வகுப்பு பள்ளி மாணவ மாணவியர்கள் 2 ஆயிரம் பேர் பள்ளி மைதானத்தில் இரத்த துளியில் பெண் இருப்பது போல் உருவ அமைப்பில் நின்று உலக சாதனை படைத்தனர். இதற்கான பாராட்டுவிழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி முதல்வரும் அறங்காவலுருமான என்.திலகம் தலைமை தாங்கினார். அக்னி சிறகுகள் நிறவனர் பிரபு, திண்டுக்கல் அக்னி சிறகுகள் அமைப்பின் தலைவி பிரியங்கா சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சேரன்பள்ளி உதவி தலைமையாசிரியர் வெண்ணிலா வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக மெர்சி பவுன்டேசன் தலைவர் அருள்மெர்சி செந்தில்குமார், திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதியரசர் திரிவேனி ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் அருள்மெர்சி செந்தில்குமார் பேசும்போது இங்கு அதிகம் மாணவ மாணவியர்கள் அமர்ந்துள்ளீர்கள் உங்கள் வீட்டில் தாயோ, அல்லது சகோதரியோ, மாதவிடாய் காலங்களில் இருக்கும் போது அவர்களுக்கு நீங்கள் உறுதனையாக இருக்க வேண்டும் என்றார். திண்டுக்கல் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் நீதியரசர் திரிவேனி அவர்கள் பேசும் போதுஇன்று பலர் குறிப்பாக பெண்கள் வெளி யிடங்களுக்கு அவர்கள் அணிந்து செல்லும் ஆடை விசயங்களில் கவனம் செலுத்துவது இல்லை. நாம் அணியும் ஆடைதான் நமக்கு சமுதாயத்தில் மதிப்பை ஏற்படுத்தும் இதை உணர்ந்து பெண்கள் நேர்த்தியான உடைகளை அணிந்து செல்ல வேண்டுமென வேண்டுகோள்விடுத்தார். சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சமுதாயத்தில் பெண்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் உலக சாதனை படைத்ததற்காக மனதார பாராட்டுகிறேன் என்றார். நிகழ்ச்சியில் பள்ளி தாளளரும் நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார் பள்ளி மேலாளரும் அறங்காவலருமான ஓ.பி.பாரதிராஜா, அறங்காவலர்கள் ஜெ.ஆல்பிரட்எங், அபிஷேக், தலைமையிலான பள்ளி நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியில் தன்னம்பிக்கை பேச்சாளர் சிங்கதேவன், சமூக ஆர்வளர் பிரசாந்த், பள்ளி உடற்கல்வி ஆசிரியர்கள் என்.அசோக்குமார், செந்தில்குமார், ஆரோக்கிய ரஞ் சனி மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



■ கப்பலோட்டிய தமிழன் வ. உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரிய ஊர்சேரியில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு, அ.இ.அ.தி.மு.க ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி சார்பாக மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி இணைச்செயலாளர் ப.செந்தில்குமார் , ஒன்றிய துணைச் செயலாளர் ரேவதி,ஒன்றிய விவசாய அணிதுணைச் செயலாளர் பாலமுருகன், மற்றும் ,குமரேசன்,தங்கவேல், ஆறுமுகம்,ஞானசேகரன், பக்கிரி மொகம்மது, கோவில்பிச்சை , வீரணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.*

# தீயணைப்புத்துறை துணை இயக்குனரிடம் ரூ. 2.51 லட்சம் பறிமுதல்

திருநெல்வேலி: நவ.19-

தீயணைப்பு துறை துணை இயக்குனர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய திடீர் சோதனையில் ரூ. 2 லட்சத்து 51 ஆயிரத்து 500 ரூபாய் கணக்கில் வராத பணம் பறிமுதல் செய்யப்பட்டது



திருநெல்வேலி மாவட்டம் என்.ஜி.ஓ. காலனியில் தீயணைப்புத் துறை மண்டல துணை இயக்குநர் அலுவலகம் உள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கட்டிடங்களுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்குவது இத்துணை இயக்குநர் அலுவலகத்தின் பொறுப்பாகும். இதில் முறைகேடு நடைபெறுவதாக ரகசிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, லஞ்ச ஒழிப்பு துறையின் கூடுதல் எஸ்.பி. எஸ்கால் தலைமையில் குழு திடீர் சோதனை மேற்கொண்டது.

சோதனையின் போது, துணை இயக்குநர் சரவணபாபு அமர்ந்திருக்கும் இருக்கைக்கு எதிர்ப்புற அலமாரியில் உள்ள பைல்களுக்குள் 6 கவர்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ.2,24,100 பணத்தை போலீசார் பறிமுதல் செய்தனர். மேலும், துணை இயக்குநரின் டிரைவராக பணிபுரியும் தீயணைப்பு வீரர் செந்தில்குமார் வசம் ரூ.27,400 ரொக்கம் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.இந்தப் பணத்துக்கு அலுவலர்களால் எந்த கணக்கும் சொல்ல முடியவில்லை. மொத்தம் ரூ.2,55,500 லஞ்சத் தொகை என சந்தேகிக்கப்பட்ட பணத்தை போலீசார் பறிமுதல் செய்தனர். தொடர்புடையவர்களுக்கு எதிராக லஞ்ச ஒழிப்பு துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# பாலமேடு வட்டார 26 களஞ்சியங்கள் இணைந்து களஞ்சியம் சார்பில் திருவிளக்கு பூஜை

அலங்காநல்லூர். நவ.19

மதுரை மாவட்டம் பாலமேடு வட்டார களஞ்சியம் குறவன்குளம் கிராமத்தில் உள்ள 26 களஞ்சியங்கள் இணைந்து தங்களின் 28 வது களஞ்சிய இயக்க நாளை சிறப்பாக கொண்டாடியது. திருவிளக்கு பூஜை நடத்தப்பட்டது. களஞ்சிய உறுப்பினர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு களஞ்சிய விழா ஊர்த்திருவிழாவாக கொண்டாடப்பட்டது. 305 பேர் கலந்து கொண்டனர் . கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலை வகித்து நடத்திக்கொடுத்தனர். களஞ்சிய இயக்க செயற்குழு உறுப்பினர். பூமாலை, இயக்கம் பற்றி பேசினார். வட்டார தலைவிகள் வட்டார பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





தங்கராக்காயி, தெம்மாங்குபாடல் குழுவினர் திருவிளக்கு பூஜை மற்றும் பக்திப்பாடல்கள் நிகழ்ச்சியுடன் தலைவிகள் பணியாளர். விழாவை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினர்.



# போதைப்பொருள் இல்லாத சமுதாய விழிப்புணர்வு பிரச்சாரம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் உறுதிமொழி ஏற்பு

திண்டுக்கல், நவ.19-

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் போதைப் பொருள் பயன்பாட்டினை ஒழிக்கும் நோக்கத்திற்காக நாஷா முக்த் பாரத் அபியான் (NMBA) திட்டம் செயல்படுகிறது. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகத்தின் மூலம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வருவதைத் தொடர்ந்து மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகத்தின் மூலமாக இத்திட்டத்தின் 5ம் ஆண்டு விழாவை தேசிய அளவில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுவருகிறது.

அதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில் போதைப்பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதற்கான நமது கூட்டு முயற்சிகளை வலுப்படுத்த, நேருஜி அரசு மேல்நிலைப் பள்ளியில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் போதைப்பொருட்களுக்கு எதிரான இணையவழி (online) மற்றும் இணைய மற்ற வழியில் (Offline) உறுதிமொழி எடுக்கப்பட்டது....இந்த உறுதிமொழி நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சத்யநாராயணன் மற்றும் சிறப்பு சிறார் காவல் அலகு, குழந்தைகள் உதவி எண் 1098 மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவு ஆகியோர்கள் இவ் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கப்பட்டது. ஜெயந்தி பள்ளி தலைமை ஆசிரியர் நேருஜி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அவர்கள் சிறப்பு விருந்தினர்களை வரவேற்று பேசினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000